## பாடம் - 1 الدرس الأول

## மறுமைநாளின் சட்டங்கள் من أحكام اليوم الآخر

இறுதி நாளை நம்புவது ஈமானின் அடிப்படைகளிலும் அதன் ஆறு கடமைகளிலும் ஒன்றாகும். எனவே மறுமை தொடர்பாக இறைவேதத்திலும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலும் வந்தவற்றை நம்பாதவரை ஒருவன் நம்பிக்கை கொண்டவனாக ஆகமுடியாது. நிச்சயமாக மறுமை நாளைப் பற்றி அறிந்து கொள்வதும், அதை அதிகமாக நினைவுகூருவதும் மிக முக்கியமானதாகும். ஏனெனில் மனிதனின் உள்ளத்தைப் பக்குவப்படுத்துதல், இறையச்சத்தை ஏற்படுத்துதல், இறைமார்க்கத்தில் உறுதியாக இருத்தல் போன்ற பல நன்மைகளுக்கு இது பெரிதும் வழிகோலும். எனவே மறுமை நாளின் அமளிகள், துன்பங்கள் குறித்து பராமுகமாக இருப்பதுதான் பெருமளவில் மனிதனின் உள்ளத்தைக் கல்லாக்கி அவனைப் பாவங்கள் புரிந்திட தூண்டக்கூடியதாக உள்ளது.

மறுமை நாள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

﴿فَكَيْفَ تَتَّقُونَ إِنْ كَفَرْتُمْ يَوْمًا يَجْعَلُ الوِلْدَانَ شِيبًا﴾ [المزمل:١٧]

'நீங்கள் (இறைவனை) நிராகரித்தால் குழந்தைகளை நரைத்தோராக மாற்றும் அந்நாளில் எவ்வாறு தப்பிப்பீர்கள்?' (73:17)

﴿يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمْ إِنَّ زَلْزَلَةَ السَّاعَةِ شَيْءٌ عَظِيمٌ ، يَوْمَ تَرَوْنَهَا تَذْهَلُ كُلُّ مُرْضِعَةٍ عَمَّا أَرْضَعَتْ وَتَضَعُ كُلُّ ذَاتِ حَمْلٍ حَمْلَهَا وَتَرَى النَّاسَ سُكَارَى وَمَا هُمْ بِسُكَارَى وَلَكِنَّ عَذَابَ اللهِ شَدِيدٌ﴾ [الحج:١،٢]

'மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சுங்கள் அந்த நேரத்தின் திடுக்கம் கடுமையான விஷயமாகும். நீங்கள் அதைக் காணும் நாளில் பாலூட்டும் ஒவ்வொருத்தியும் தான்பாலூட்டியதை மறந்துவிடுவாள். ஒவ்வொரு கர்ப்பிணியும் தான் கருவில் சுமந்ததை ஈன்றுவிடுவாள். போதையவயப்பட்டோராக மனிதர்களைக் காண்பீர். அவர்கள் போதை வயப்பட்டோர் அல்லர். மாறாக அல்லாஹ்வின் வேதனை கடுமையானது.' (22:1,2)

**மரணம்** - மரணம் இவ்வுலகில் உயிர் வாழும் ஒவ்வொருவருக்கும் இறுதிக் கட்டமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿كُلُّ نَفْسٍ ذَائِقَةُ المَوْتِ﴾ [آل عمران:١٨٥] 'ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைப்பவரே!' (3:185)

﴿كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ﴾ [الرَّحمن:٢٦] 'இதில் (பூமியில்) உள்ள அனைவரும் அழிபவர்களே.' (55:26)

நபி (ஸல்)அவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்:

﴿إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُمْ مَيِّتُونَ﴾ [الزُّمر:٣٠] நபியே!) நீர் இறப்பவரே! அவர்களும் இறப்போரே! (39:30)

இவ்வுலகில் எந்த மனிதனுக்கும் நிரந்தரம் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَمَا جَعَلْنَا لِبَشَرٍ مِنْ قَبْلِكَ الخُلْدَ أَفَإِنْ مِتَّ فَهُمُ الخَالِدُونَ﴾ [الأنبياء:٣٤]

'(நபியே!) உமக்கு முன் எந்த மனிதருக்கும் நாம் நிரந்தரத்தை ஏற்படுத்தவில்லை.' (21:34)

1.மரணம் என்பது சந்தேகத்திற்கிடமில்லாத உறுதியான விஷயமாக இருந்தும் பெரும்பாலோர் இது பற்றி அலட்சியமாகவே உள்ளனர். ஒரு முஸ்லிம் மரணத்தை அதிகமதிகம் நினைவுகூர்வதும் இவ்வுலகில் நேரம் தவறிவிடுவதற்கு முன் மறுமைக்காக நற்செயல்களைச் செய்து தயாராக இருப்பதும் அவசியமாகும்.

عن ابن عباس ﷺ قال : قال رسول الله ﷺ لرجل وهو يعظه : اغتنم خمسا قبل خمس: شبابك قبل هرمك ، وصحتك قبل سقمك ، وغناءك قبل فقرك ، وفراغك قبل شغلك ، وحياتك قبل موتك.(ك:١٨/ ٢١٦، هق في شعب الإيمان:٢١/ ٢٠٣،٢٠٥، ابن أبي شيبة:٨/ ١٢٧)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஐந்து நிலைமைகள் ஏற்படுவதற்கு முன் ஐந்து நிலைமைகளைப் பேணிக்கொள். மரணத்திற்கு முன் வாழ்வையும், நோய் வரும் முன் ஆரோக்கியத்தையும், வேலை வரும் முன் ஓய்வையும், வயோதிகத்திற்கு முன் வாலிபத்தையும்,ஏழ்மைக்கு முன் செல்வ நிலையையும் பேணிக்கொள்.' (ஹாகிம்-18/216 பைஹகீ ஷுஅபுல்ஈமான்-21/203,205, இப்னு அபீ ஷைபா- 8/127)

மரணிப்பவன் இவ்வுலகின் சொத்து சுகங்களிலிருந்து எதையும் தன்னுடன் மண்ணறைக்கு எடுத்துச் செல்லப் போவதில்லை. அவனுடன் தங்கியிருப்பது அவனது செயல்கள் மட்டுமே. எனவே நற்செயல்களைச் சித்தப் படுத்திக் கொள்வதற்கு அக்கறை காட்டுங்கள். அதன் மூலம் தான் நீடித்த நற்பாக் கியத்தை நீங்கள் அடைய முடியும். அல்லாஹ்வின் உதவியால் வேதனை யிலிருந்து ஈடேற்றமும் பெற முடியும்.